வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 27.11.2024 புதன்கிழமை இதழ் : 331 பக்கங்கள் : 12




## மாவீரர் நாள் இன்று!

### தமிழர் தாயகம் முழுவதும் உணர்வுபூர்வ அஞ்சலிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழ் மக்களின் உரிமைக்காக போராடி தமது இன்னுயிர்களை ஈகை செய்த வீரமறவர்களை உணர்வெழுச்சியுடன் நினைவேந்த தமிழர் தாயகம் தயார் நிலையில் உள்ளது.

வடக்கு, கிழக்கில் 25 இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்கள் நினைவேந்தப்படவுள்ளனர்.

துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள், விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்கள் சிவப்பு, மஞ்சள் வர்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு நினைவேந்தலுக்கு தயார் நிலையில் உள்ளன. இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும்

11

## புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம் யாழில்!

யாழ்ப்பாணம், நவ. 27

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த நாள் வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

70ஆவது அகவை

11

சிவாஜிலிங்கம் தலைமையில் நடந்தது



### சீனா செல்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு சீனாவுக்கு விஜயம் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை

11

### மோசமான காலநிலையால்

## வடக்கு மாகாணத்தில் 52ஆயிரம் பேர் பாதிப்பு

### இடைத்தங்கல் முகாம்களில் மக்கள்

யாழ்ப்பாணம், நவம்பர் 27

**வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 15ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 962 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர்கள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.**

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 436 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் 34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன

11

### ஜனவரி 9 இல் பட்ஜெட்!

கொழும்பு, நவ. 27

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஜனவரி மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே

11

### வடக்கு மாகாண இடர்நிலைமை ஆளுநர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர்நிலைமை தொடர்பில் ஆராயும் அவசர கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையில் மன்னார் மற்றும் யாழ்ப்பாண

11

### யாழ்ப்பாணத்தில் நேற்று கொட்டிய தொடர் மழையால் 9,404 பேர் பாதிப்பு

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 2634 குடும்பங்களைச் சேர்ந்த 9404 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 48 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 573

11

### க.பொ.த உயர்தரப் பரீட்சை மூன்று நாள்கள் ஒத்திவைப்பு

சீரற்ற காலநிலை காரணமாக

கொழும்பு, நவ. 27

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையால் க.பொ.த உயர்தரப் பரீட்சை 3 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்று, நாளை, நாளை மறுதினம் ஆகிய தினங்களில் உயர்தரப் பரீட்சை நடைபெறமாட்டாது என பரீட்சைகள்

11

### தாய், சிசு மரண விவகாரம்:

### மன்னார் வைத்தியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்!

மன்னார், நவ. 27

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அனைத்துச் செயல்பாடுகள் மீதும் மக்கள் குற்றம் சுமத்துவதாக தெரிவித்து வைத்தியசாலையில் பணி புரிகின்ற வைத்தியர்கள், ஊழியர்கள், சுகாதார பணியாளர்கள் இணைந்து நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில்

11

## உயிரிழந்தோர் நினைவு கூரலை தடுக்க அரசுக்கு அனுமதியில்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர அரசாங்கம் எவ்வித தடைகளையும் ஏற்படுத்தாது என்பதுடன், தடைகளை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு அனுமதியும் இல்லை. ஆனால், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ நினைவு கூரமுடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களை

11

## ரஷ்ய இராணுவத்தில் தமிழ் இளைஞர்கள்: வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் சேர்த்ததாகக் கூறப்படுவது தொடர்பில் அவர்களது பெற்றோரால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் நேற்று காலை முறைப்பாடு செய்யப்பட் டது. தமது பிள்ளைகளை மீட்டுத்தரு மாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞர்களின் பெற்றோரே, ஆளுநர் செயலகத்தில் நேற்று காலை ஆளுநரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

பெற்றோரது கோரிக்கையை செவிமடுத்த ஆளுநர், உடனடியாக வெளிவிவகார அமைச்சின் செயலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்தினார். பெற்றோர்களிடம் அவர்களது விவரங்களைப் பெற்று வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை, வெள்ள அனர்த்தங்களில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் மழையுடனான காலநிலை தொடர்வதால் கால்நடைகளை பாதுகாக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகள் தொடர்பில், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

திறந்த வெளிகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் கோழிகள் பாரிய அளவில் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுவதாகவும், குளிர் காற்று, கடும் மழை வெள்ளம் போன்றவற்றில் இருந்து கால்நடைகளை பாதுகாப்பதற்காக கொட்டகைகள் மற்றும் மேட்டு நிலங்களில் கால்நடைகளை பாதுகாப்பாக அடைத்து பராமரிக்குமாறும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு உடன் சிகிச்சை பெறும் பொருட்டு அருகிலுள்ள கால்நடை மருத்துவரை உதவிக்கு அழைக்குமாறும், போதிய கால்நடை தீவனங்களை கையிருப்பில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகள் இறப்பு ஏற்படின் பண்ணைப்பதிவு இலக்கம் மற்றும் காது இலக்கம் என்பவற்றுடன் இறப்பை உறுதி செய்யும் வகையிலான புகைப்படங்களுடன் கால்நடை மருத்துவ பணிமனைக்கு தகவலை வழங்குமாறும், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மாகாணப்ப பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் உதவிக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க யாழ் மாவட்டம்- 0773638953 கிளிநொச்சி- 0777799066, முல்லைத்தீவு - 0770755225, வவுனியா - 0774457417, மன்னார்- 0777853124 இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (அ)



# திருநெல்வேலியில் வீதிக்கு குறுக்கே முறிந்து விழுந்த மரம்!

யாழ்ப்பாணம், நவ. 27

திருநெல்வேலி சந்தியிலிருந்து கோண்டாவில் செல்லும் வீதியில் வீதியோரத்தில் நின்ற மலைவேம்பு மரம் ஒன்று நேற்று மாலை வேரோடு சரிந்து வீழ்ந்தது.

இதனால் குறித்த பாதையூடாக பயணம் செய்த மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

பின்னர் ஊர் மக்கள் ஒன்றிணைந்து அந்த மரத்தினை வெட்டி அகற்றிய பின்னர் போக்குவரத்து சீரானது. (05)

# முதலீடுகளின் போது சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாது பார்த்துக்கொள்ளுங்கள்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 27

முதலீட்டாளர்களுக்கான ஒத்துழைப்புகளை வழங்கும் அதேநேரம் இயன்றளவு சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு குறைவாக இருப்பதை உறுதி செய்வது அதிகாரிகளின் கடமை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

முதலீட்டுச் சபையின் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும்போது இயன்றளவு சுற்றாடலுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் சுற்றுலாசார் முதலீட்டுக்கான காணிகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் நிலவுவதாகவும் குறிப்பிட்டர்.

குறிப்பாக வனவளத் திணைக்களம், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் என எவருக்கும் தெரியாமல் காணிகளை தமது திணைக்களத்துக்குரியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதனால் இந்த நிலைமை ஏற்படுவதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன், வேலணை, வடமராட்சி கிழக்கு மற்றும் காரைநகர் பிரதேச செயலர்கள் உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (எ-05)

# முல்லைத்தீவு மக்களுக்கு எச்சரிக்கை

முல்லைத்தீவு, நவ. 27

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்தள்ள நிலையில் அதன் வான் கதவுகள் எந்த நேரத்திலும் திறக்கப்படலாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் அதன் தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# பால்நிலை வன்முறைக்கு எதிர்ப்பு வடக்கில் செயற்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம், சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்றிட்டம் நேற்று முன் தினம் ஆரம்பமானது.

"பாலியல் துன்புறுத்தலை நிறுத்துவோம் அனைவருக்கும் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்தை உருவாக்குவோம், குரல் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில், துண்டுப்பிரசுரங்கள் வழங்கும் செயற்றிட்டம் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.சிறிமோகனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை இச்செயற்திட்டம் கிளிநொச்சியில் பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரனாலும், முல்லைத்தீவில் மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) எஸ்.குணபாலனாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளுக்காக குரல் கொடுக்கும் வகையில் இச் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்செயற்திட்டம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இச் செயற்றிட்டத்தில் உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி, யாழ் சமூக செயற்பாட்டு மைய உத்தியோகத்தர்கள், சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# முல்லை. மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 143 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் 163 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



நேற்ற பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது

அதனடிப்படையில், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 193 பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற வானிலை தொடர்பில் மகள்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இடர் கிராம சேவையாளர் ஊடாக முகாமைத்துவப் பிரிவு, பொலிசார், இராணுவத்தினரின் உதவியை பெறுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (05)

# கிளிநொச்சியில் வான் பாயும் குளங்கள்

கிளிநொச்சி, நவ. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக, குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. கனகாம்பிகைக்குளம் உள்ளிட்ட மாவட்டத்தின் சிறிய குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ளன.

மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய 36 அடி நீர்க்கொள்ளவைக் கொண்ட இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 26 அடி ஐந்து அங்குலமாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# மன்னார் நடமாடும் சேவை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இன்று புதன்கிழமை ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவையானது, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# 43 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மன்னாரில் வெள்ளத்தால் பாதிப்பு!

மன்னார், நவ. 27

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக, மாவட்டத்தில் 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை வரையான தகவலின் படி 43 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 16 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர் தரப் பரீட்சைக்கான மத்திய நிலையங்கள் இல்லாத பாடசாலைகள் மற்றும் மதஸ்தலங்கள், பொது மண்டபங்கள் இவ்வாறு தற்காலிக நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

குறித்த நலன்புரி நிலையங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 426 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏனையவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தேங்கியுள்ள வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், கிராம அலுவலர்கள் தமது கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களை திரட்டி வருவதோடு, அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களை பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு, மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தியாகங்களின் பெறுமதி

ஜனதா விமுத்திப் பெரமுன (ஜே.வி.பி) ஆயுதப் புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்று நம்பி, இரண்டு முறை ஆயுதக் கிளர்சியில் ஈடுபட்டது. இரண்டு தடவைகளும் படுமோசமான அழிவை சந்தித்தது - இறுதியில் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களையும் இழந்துபோனது. மகாவலியாற்றில் தினமும் சடலங்கள் மிதந்து கொண்டிருந்தன. அதன் தலைவர் (ருகுணு) றோகண விஜயவீர படுகொலை செய்யப்பட்டார். அவர் அரை உயிரில் இருக்கும் போதே எரியூட்டப்பட்டதாகவே பின்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஜே.வி.பியின் உறுப்பினர்களை அழித்தொழித்த விடயத்தில் உள்ளுக்குள்ளும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி அவர்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்கவல்லை.

ஆனால் தங்களுக்கான நீதியென்பது அதிகாரத்தை கைப்பற்றுவதுதான் என்னும் உறுதியுடன் தங்களை புதுப்பித்துக் கொண்டு, ஜனநாயகத்தை அத்திபாரமாகக் கொண்டு, தங்களை ஓர் அரசியல் ஸ்தாபனமாக கட்டியெழுப்பினர். இந்தக் காலத்தில் அவர்களை அதிகாரத்தை கைப்பற்றக் கூடிய ஒரு தரப்பாக எவருமே கருதியதேயில்லை - ஆனால், அவர்கள் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் பயணித்தனர். அதிகாரத்தை நோக்கிச் செல்வதற்கான, ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு உழைத்தனர். அவர்களின் கடின உழைப்பு அவர்களை கொழும்பின் அதிகாரத்திற்கு கொண்டுவந்திருக்கின்றது.

எந்த அரச படைகள் அவர்களை நிர்மூலமாக்கியதோ, அந்தப் படைகளின் தலைமைத் தளபதியாக ஜே.வி.பியே இருக்கும் அரசியல் சூழல் உருவாகியிருக்கின்றது. ஆயுதப் போராட்டத்தை நம்பியபோதிலும், தோல்வி தந்த படிப்பினைகளிலிருந்து கற்றுக்கொண்டனர் - ஆயுதங்களின் மூலம், தாங்கள் விரும்பும் அதிகாரத்தை, ஒரு போதுமே கைப்பற்ற முடியாதென்பதை புரிந்து கொண்டு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிய அதே வேளை, தங்களின் அடிப்படையான கொள்கைகளையும் விட்டுக்கொடுக்காமல் ஓர் அதிகாரத் தரப்பாக எழுச்சியுற்றிருக்கின்றனர். மார்க்சியம் தொடர்பில் பேசிய போதும் கூட, தற்போது யதார்த்தவாதத்திற்கே முன்னுரிமையளிக்கும் ஓர் அரசியல் ஸ்தாபனமாக தங்களை மாற்றியிருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அவர்களது தியாகங்கள் வீண் போகவில்லை. ஜே.வி.பி. அதன் இலக்கில் வெற்றிபெற்றுவிட்டது.

நமது சூழலை உற்று நோக்கினால் என்ன தெரிகின்றது? ஆயுத விடுதலைப் போராட்டத்தின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றப் புறப்பட்டு, 1990களில் ஜனநாயக நீரோட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் (டி.பி.எல்.எப்.) ஆகிய அரசியல் கட்சிகளின் வளர்ச்சி என்ன? வடக்கு, கிழக்கில் இவர்களுக்கு இருக்கின்ற அரசியல் கட்டமைப்பு என்ன? மக்கள் ஆதரவு என்ன? ஏதாவது இருக்கின்றதா? இலங்கை தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டதன் மூலம், பெற்றுக் கொண்ட வெற்றியை, தனிக் கட்சியாக - ஆகக் குறைந்தது ஒரு கூட்டாக கூட தக்கவைக்க முடியாத கையறுநிலைக் கட்சிகளாகவே இருக்கின்றனர்.

மறுபுறம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிவுற்று, பதினைந்து வருடங்களாகின்றது. கடந்த பதினைந்து வருடங்களில் அந்த அமைப்பில் எஞ்சியவர்களால் புதிய சூழலுக்கான அரசியல் ஸ்தாபனமொன்றை கட்டியெழுப்ப முடிந்ததா? புலிகள் அமைப்பிலிருந்து, ஆகக் குறைந்தது, சில முன்னேற்றகரமான சிந்தனையாளர்கள் கூட வெளித்தெரியவில்லையே - ஏன்? இத்தனை புலம்பெயர் அமைப்புகள் என்ன செய்திருக்கின்றன? ஏன் முடியவில்லை. ஜனநாயக போராளிகள் என்னும் பதாகைகளையெல்லாம், தமிழ் மக்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதைத்தானே, கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்திருக்கின்றது.

றோகண விஜயவீரவும் கொல்லப்பட்டார் - ஐயோ - தலைவர் போய்விட்டாரே என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கவில்லையே அந்த அமைப்பு - அதே வேளை பழிவாங்கும் அரசியலையும் செய்ய முயற்சிக்கவில்லை - ஏனெனில் ஓர் அரச இயந்திரத்தை பழிவாங்க முடியாது - அதற்குப் பதிலாக அதனையே கைப்பற்றும் உத்திகள் பற்றியே ஜே.வி.பி சிந்தித்தது. சாதித்தது. எனவே தியாகங்களுக்கான பெறுமதி என்பது, வருடம் தோறும் விளக்கேற்றுவதுடனும், சில மரக் கன்றுகளை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் பெற்றோருக்கு வழங்குவதுடன் முடிந்துவிடுவதில்லை. நம்மவர்களது தியாயங்களுக்கான பெறுமதி என்பது, புதிய சூழ்நிலைகளுக்கான செயலிலேயே தங்கியிருக்கின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் ,ரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது."
- தமிழகக் கவிஞர் அறிவுமதி



# சுதுமலையில் வீட்டு மதிலில் மோதிய கப்

யாழ்ப்பாணம், நவ. 27



கப் ரக வாகனம் ஒன்று வீதியோரம் இருந்த வீட்டு மதிலில் மோதி விபத்துக்குள்ளானது. தாவடி - சுதுமலை வீதியில் அமைந்துள்ள சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நேற்று க் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வீதியில் சென்ற பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது சுதுமலை அம்மன் கோவில் குருக்களது வீட்டு மதிலே பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொலைத் தொடர்பு தூண் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதே வேளை இந்த விபத்து சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு எதுவும் இடம்பெறவில்லை. விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாக மானிப்பாய் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ- 05)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

யாழ்ப்பாணம், நவ. 27



மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நல்லூர் சங்கிலியன் தோப்பு, ஜே - 109 நல்லூர் கிராம உத்தியோகத்தர் பகுதிகளைச் சேர்ந்த 77 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் சாமந்திப் பூ மகளிர் சுய உதவிக் குழு தலைவி க. விஜயலோயினி தலைமையில் வேல்முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் கலந்து கொண்டு, உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். இதில் கிராம உத்தியோகத்தர் என். ஜெயவந்தனும் கலந்து கொண்டார். (எ-02)

# முழுக்கொள்ளளவை எட்டிய 100இற்கும் மேற்பட்ட குளங்கள்

## வவுனியாவில் கடும் மழையால் மக்கள் பாதிப்பு


வவுனியா, நவ. 27

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக 120இற்கும் மேற்பட்ட குளங்கள் முழுக்கொள்ளவை எட்டியுள்ளதுடன் அநேகமான குளங்கள் 90 சதவீதம் நீர் நிறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளம் நிறைந்து காணப்படுவதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில், வவுனியாக்குளம் தனது முழுக்கொள்ளளவை எட்டியுள்ளதுடன் நேற்று அதிகாலை முதல் மேலதிக நீர் வெளியேறி வருகின்றது. இதுவரை செட்டிக்குளம் பிரதேச செயலா ளர் பிரிவின் கீழ் உள்ள இராமயன்குளம், அருவித்தோட்டம் நாகராயன் குளம் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் உள்ள மடத்துவிளாங்குளம் ஆகியவற்றின் அணைக் கட்டுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றை சீர்செய்யும் பணிகளில் அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (எ- 10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 27 புதன்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 12
நல்ல நேரம் :9.00 -10.30
ராகு காலம் :12.00 - 1.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வரவு உயரும்.

**இடபம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**மிதுனம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். தாயாருக்கு கை கால் வலி வந்து போகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**கடகம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆடை ஆபரணம் சேரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்துக் கொள்வார்கள்.

**துலாம்**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். கணிசமாக லாபம் உயரும்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். உங்களை யாரும் கண்டு கொள்வதில்லை முக்கியத்துவம் தருவதில்லை என்றெல்லாம் புலம்புவீர்கள்.


**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

# மன்னாரில் வீடுகளில் முடங்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்கவில்லை!

## ரிஷாத் எம். பியிடம் தெரிவித்த மக்கள்

மன்னார், நவ. 27

மன்னாரில் மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் வீடுகளில் முடங்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்கப்படவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அத்துடன், மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களையும் பார்வையிட்ட அவர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடனும் கலந்துரையாடினார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு,

"மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக, சுமார் 7500 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம்.

மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை பார்வையிட்டதோடு, பெரும் துன்பத்துக்கு ஆளாகியுள்ள மக்களையும் சந்தித்துப் பேசினோம்.


குடியிருப்புகள் நீரில் மூழ்கியுள்ளதால், உணவுகளை சமைக்க முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். எனவே, இது தொடர்பில், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்துடனும், மேலதிக செயலாளருடனும் பேசியுள்ளோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சமைத்த உணவுகளை தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு வழங்குவதற்கும், உலர் உணவுப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் வேண்டியுள்ளோம்.

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, எதிர்வரும் தினங்கள் மிகவும் ஆபத்தாக காணப்படுவதால், பாதுகாப்புத் தரப்பினரின் உதவியுடன், மக்களின் பாதுகாப்புக்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்துடன், பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு மாத்திரமே உணவுகள் வழங்கப்படுகின்றன எனவும் வெள்ளத்தால் வெளியேற முடியாமல் வீடுகளிலேயே தங்கியுள்ள மக்களுக்கு உணவுகள் வழங்கப்படவில்லை எனவும் அறிய முடிகின்றது. இது குறித்து, துரித கதியில் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும், வெளியேற முடியாமல் வீடுகளுக்குள் இருக்கும் மக்களுக்கும் தேவையான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகளை வழங்குவதற்கு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்"- என்றார். (எ)

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு





வவுனியா, நவ. 27

வவுனியா கனகராயன்குளம் - பெரியார்குளம் பகுதியில் மாவீ ரர் வாரத்தையொட்டி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இன விடுதலை போராட்டத்துக்காக தமது இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், தீபங்கள் ஏற்றி அகவணக்க மரியாதையும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ப. சத்தியலிங்கம், கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# வவுனியாவில் மாவீரர்நாள் அனுஷ்டிப்பு





வவுனியா, நவ. 27

வவுனியா கல்மடு இரண்டாம் படிவத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டதோடு மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பும் நடைபெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கம் மற்றும் தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர் குழுமம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயாரால் ஈகச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சஜித்தின் ஆசனத்தில் அமர்ந்தமைக்கு

## பகிரங்க மன்னிப்பு கோரிய அர்ச்சுனா!

கொழும்பு, நவ. 27

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஆசனத்தில் அமர்ந்தமைக்காக பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹனதீரவிடம் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.**

பத்தாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த செயலமர்வின் இடைநடுவே அவர் மன்னிப்பு கோரியுள்ளார்.

நான் தெரிந்து அந்த ஆசனத்தில் அமரவில்லை. அது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனமென எனக்குத் தெரியாது.

அந்த ஆசனத்தில் அமருவதால் சிக்கல் ஏற்படுமென்றும் நான் அறிந்திருக்கவில்லை.

அது துரதிஷ்டவசமாக இடம்பெற்ற ஒரு நிகழ்வு.

அதற்காகத் நான் பகிரங்கமாக மன்னிப்பு கோருகிறேன் என தமது சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார்.

கடந்த 21 ஆம் திகதி கூடிய 10ஆவது பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வில் பங்கேற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதன்போது பாராளுமன்ற பாதுகாப்பு அதிகாரிகள் அவரை வேறு ஆசனமொன்றில் அமருமாறும் அந்த ஆசனம் எதிர்க்கட்சி தலைவருக்கு ஒதுக்கப்பட்டதெனவும் கூறியிருந்தனர்.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மறுப்பு தெரிவித்திருந்ததுடன் அது தொடர்பான காணொளியை தமது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். (அ)

## மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 27

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையின் காரணமாக, எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பதுளை, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அதிகளவான பிரதேச செயலகப் பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, நவ. 27

பதுளைக்கும் பண்டாரவளைக்கும் இடையிலான ரயில் வீதியில் மண்மேடுகளும் கற்களும் சரிந்து வீழ்ந்துள்ளமையால், மலையக ரயில் மார்க்கத்தின் பதுளைக்கும் பண்டாரவளைக்கும் இடையிலான ரயில் வீதி தடைப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மண்மேடுகள், மரங்கள் மற்றும் பாறைகள் சரிந்துள்ளமையால் பதுளை மாவட்டத்தில் பல வீதிகள் தடைப்பட்டுள்ளதாகவும் பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, நவ. 27

இந்த வருடத்தில், நவம்பர் மாதத்தின் முதல் 20 நாட்களில், ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள், இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளதுடன், அவர்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆயிரத்து 717 ஆகும்.

ரஷ்யாவில் இருந்து, 20 ஆயிரத்து 157 சுற்றுலாப் பயணிகளும்,

ஜேர்மனியில் இருந்து 9 ஆயிரத்து 444 சுற்றுலாப் பயணிகளும்,

பிரித்தானியாவில் இருந்து 7 ஆயிரத்து 715 சுற்றுலாப் பயணிகளும்,

அவுஸ்திரேலியாவில் இருந்து 4 ஆயிரத்து 762 சுற்றுலாப் பயணிகளும், நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள், 1.74 மில்லியனுக்கும் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள், நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில் 3 இலட்சத்து 49 ஆயிரத்து 690 பேர் இந்தியாவில் இருந்தும்,

ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 756 பேர் ரஷ்யாவில் இருந்தும்,

ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 385 பேர், பிரித்தானியாவில் இருந்தும் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

## அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதுமானதல்ல!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, நவ. 27

அனர்த்த முகாமைத்துவத்தில் நிறுவன கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதாது எனவும், தீர்வுகளை அடி மட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களை பலப்படுத்தி அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கு புதிய தீர்வுகள் வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகரவின் பதவியேற்பு நிகழ்வில் நேற்று முன் தினம் இணைந்து கொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அனர்த்த முகாமைத்துவ சட்ட முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு பணியாற்றும் எந்தவொரு அதிகாரிக்கவும் முன்னிற்பேன் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உறுதியளித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அனர்த்த முகாமைத்துவத்திற்காக அரசாங்கம் அதிகளவு செலவிடுவதாகவும், சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்த செலவைக் குறைக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ)

## சீரற்ற காலநிலையால் பாதிப்புற்றோருக்கு நிவாரணங்கள் வழங்கும் கடற்படையினர்!

கொழும்பு, நவ. 27

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற்படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களில் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ச மற்றும் அத்துரெலிய ஆகிய பிரதேசங்களுக்கு கடற்படையின் மூன்று நிவாரணக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடுமையான மழை வீழ்ச்சி காணமாக நில்வளா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்படும் அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே அத்தகைய பிரதேசத்தில் வசிக்கும் மக்களை மீட்பதற்காக கடற்படையின் மூன்று நிவாரணக்குழுக்கள் உயிர்ப்பாதுகாப்பு உபகரணங்களுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த நிவாரணக்குழுவினர் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மற்றும் பிரதேச வாசிகளுக்கும் சேவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். அதேவேளை, நாடு தழுவிய ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 134 குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## நுவரெலியா வெள்ளத்தில்!



கொழும்பு, நவ. 27

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகிய பிரதேசங்களில் நேற்று முன் தினம் இரவு முதல் இடைவிடாது பெய்து வரும் பலத்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளையில் அதிக மழை பெய்து வருவதுடன் தாழ் நில பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கந்தபளை பிரதேசத்தில் கல்பாலம பிரதேசம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதால் அப்பகுதியின் தாழ்வான நிலங்களில் அமைந்துள்ள பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மரக்கறி பயிர்களும் பாரியளவில் சேதமடைந்துள்ளது.

அத்தோடு, பெய்த கடும் மழை காரணமாக உடபுசல்லாவை - நுவரெலியா ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

அத்துடன், கந்தப்பளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ள நீர் போவதினால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் சில வீதிகள் சேதமடைந்துள்ளது. சில பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது. (அ)

## சுஜீவவின் சொகுசு வாகனத்தை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, நவ. 27

முன்னாள் அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொகுசு வாகனத்தை விடுவிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

100 மில்லியன் ரூபா பிணை அடிப்படையில் குறித்த சொகுசு வாகனத்தை மீள ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த சொகுசு வாகனம் நீதிமன்ற உத்தரவின் கீழ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி!

## அமைச்சரவை வழங்கியது

கொழும்பு, நவ. 27

**70 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங் கீகாரம் வழங் கியுள்ளது.**

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது திறந்த விலை மனு கோரலின் பின்னர் இலங்கைக்கு, அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் அரச வர்த்தக பல்வேறு சட்டபூர்வ கூட்டுத் தாபனம் மற்றும் லங்கா சதொச ஆகியவற்றின் ஊடாக இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்யப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை சந்தையில் இன்னும் நாட்டு அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மியன்மாரில் தடுப்பில் இருந்த 32 இலங்கைப் பிரஜைகள் மீட்பு!

கொழும்பு, நவ. 27

மனிதக் கடத்தலால் பாதிப்புக்குள்ளான நிலையில் மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 32 இலங்கை பிரஜைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் 24 ஆண்களும் 8 பெண்களும் உள்ளடங்குவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு, தாய்லாந்து மற்றும் மியன்மாரில் உள்ள இலங்கை தூதுவர்கள் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மீட்கப்பட்ட அனைவரும் தற்போது தாய்லாந்தின் தக் மாகாணத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# காணாமல் போயிருந்த நபர் வயலிலிருந்து சடலமாக மீட்பு!

கொழும்பு, நவ. 27

மாத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒவிலிகந்த பிரதேசத்தில் உள்ள வயலிலிருந்து நேற்று ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை ஒவிலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 23 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது மாத்தளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 11 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தவருக்கு 8 வருட கடூழிய சிறை!

கொழும்பு, நவ. 27

11 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் நபரொருவருக்கு 8 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுமிக்கு 02 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெசாக் பண்டிகை அன்று 11 வயது சிறுமி ஒருவர் தனது தாய் மற்றும் சகோதரியுடன் இணைந்து வெசாக் கூடுகளைப் பார்வையிடச் சென்றுள்ளார்.

இதன்போது, சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நபர் வெசாக் கூடுகளை காண்பித்து சிறுமியை ஏமாற்றி ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றில் முன் வைக்கப்பட்ட சாட்சிகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமைச்சு விடயதானங்கள் வர்த்தமானியில் வெளியீடு!

கொழும்பு, நவ. 27

அமைச்சர்களின் விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 44 ஆம் பிரிவின் (01) உப சரத்தின் படி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுகளின் எண்ணிக்கை அதில் அமைச்சர்களுக்கான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

24 அமைச்சுப் பதவிகளுக்கான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் இந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மண்மேடு சரிந்து பெண் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 27

சீரற்ற வானிலை காரணமாக பண்டாரவளை பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஏற்பட்ட விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பண்டாரவளை பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடைய பெண் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பண்டாரவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# அர்ஜன மகேந்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

கொழும்பு, நவ. 27

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜன மகேந்திரனை பெப்ரவரி 25ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவின் கோரிக் கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ)

# சீரற்ற காலநிலையினால் பதுளையில் கடும் பாதிப்பு!

கொழும்பு, நவ. 27

சீரற்ற வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தில் பல வீதிகள் தடைப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நிலச்சரிவு, மண்மேடு சரிந்து விழுதல், மரங்கள் மற்றும் பாறைகள் சரிந்து வீழ்ந்தமையினால் வீதிகள் தடைப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் பதுளை பண்டாரவளை வீதி உடுவர கிரிமண்டல யத்திற்கு அருகில், ஹப்புத்தளை பெரகல வீதி,பதுளை - பசறை வீதி மூன்றாம் கம்பம், பதுளை கந்தன ஊடாக ஸ்பிரிங்வேலி வீதி ஊடாக, பதுளை பசறை வீதியின் 7 ஆம் கம்பம், பிபில லுணுகல வீதியில் அரவாகும்புர ஆகிய வீதிகள் தடைப்பட்டுள்ளன.

வீதிகள் தடைப்பட்டுள்ளதால், மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு சாரதிகளை பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ)

# மின்சாரம் தடைப்பாட்டால் உடன் அறிவிக்கவேண்டும்!

கொழும்பு, நவ. 27

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மின்சார விநியோகத்தடை ஏற்படுமாயின் அது தொடர்பில் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார விநியோகத்தடை ஏற்படும் நிலையில், அது தொடர்பில் அறிவிப்பதற்கான முறைமையினையும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, ஊநுடீஊயசந எனும் செயலி ஊடாக அல்லது இலங்கை மின்சார சபையின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் அல்லது 1987 எனும் துரித இலக்கத்திற்குக் குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் அறிவிக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் சேவையினை பெற்றுக்கொள்ள முடியுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ)

# மகாவலி ஆற்றின் தாழ்நிலப்பகுதி மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 27

மகாவலி ஆற்றின் தாழ்நிலப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை நாளை காலை 6 மணி வரை அமுலில் இருக்கும் என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

திம்புலாகல, ஈச்சிலம்பட்டை, ஹிங்குராங்கொடை, கந்தளாய், கிண்ணியா, கோறளைப்பற்று வடக்கு, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில, தமன்கடுவ, தம்பலகாமம், வெலிகந்த பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள தாழ்நிலப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மொழி, மத அடிப்படையில் அமைச்சரவை அமைக்கவில்லை

## அமைச்சரவை பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, நவ. 27

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனமொழி சாதிய அடிப்படையில் அமைச்சரவையை உருவாக்கவில்லை என அமைச்சர வைப்பேச்சாளர் நளிந்தஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவையில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் இதனை அவர் கூறினார்.

அமைச்சரவையை கையாளக்கூடிய மிகத்திறமை வாய்ந்த தனிநபர்களையே நாங்கள் தெரிவு செய்திருக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

மேல் மாகாண ஆளுநராக முஸ்லிம் வர்த்தகர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதி சபாநாயகர், பிரதி அமைச்சர் பதவிகளை முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளோம். மேலும் தேசிய பட்டியல் மூலம் முஸ்லிம் ஒருவருக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளோம் என அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டார்.

நாங்கள் இலங்கை முழுவதுக்கும் சேவையாற்றுவது குறித்தே கவனம் செலுத்துகின்றோம். இன மத மொழி அடிப்படையில் இல்லை என அவர் மேலும் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையை முஸ்லிம் சமூகம் இன மத அடிப்படையில் நோக்கக் கூடாது என வேண்டுகோள் விடுத்த அவர், ஐக்கிய இலங்கையை ஸ்தாபிக்கும் நோக்கத் துடனேயே நாங்கள் அமைச்சர வையை அரசாங்கத்தை ஏற்ப டுத்தியுள்ளோம் என தெரிவித்தார். (அ)

# நீரில் மூழ்கிய தந்தையும் மகளும் சடலங்களாக மீட்பு

கொழும்பு, நவ. 27

நீர்கொழும்பு குளத்தில் சிறிய மீன்பிடி படகு கவிழ்ந்ததில் காணாமல் போன தந்தை மற்றும் மகளின் சடலங்கள் நீர்கொழும்பு முனக்கரே சிறிவர் தன்புர குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடி படகு துரதிஷ்டவசமாக கவிழ்ந்ததில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரணில் பெர்னாண்டோ (வயது-50) அவரது மூத்த மகளான நிலுஷா நெத்மி பெர்னாண்டோவும் (வயது-18) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த அருட்தந்தை, உறவினர்கள் ஏழு பேருடன் சிறிய மீன்பிடி படகில் பயணித்துள்ளனர். இவர்களில் உயிரிழந்த தந்தையும், மகளும் உள்ளடங்குகின்றனர்.

எனினும், படகு கவிழ்ந்ததைக் கண்ட அருகிலிருந்தவர்கள் இந்த சிறிய படகில் பயணித்த கத்தோலிக்க தந்தை மற்றும் நால்வரை விரைவாக காப்பாற்றிய போதிலும், நீரோட்டம் அதிகரித்ததால் தந்தையையும் மகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் இருவரும் நேற்று முன் தினம் திங்கட்கிழமை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (அ)

# மனைவியின் கை விரல்களை வெட்டி சித்திரவதை செய்த கணவன் கைது!

கொழும்பு, நவ. 27

தனது மனைவியின் கை விரல்களை வெட்டியெடுத்து சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் கணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, மீகஹகிவுல பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய மனைவியே காயமடைந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக கோபமடைந்த கணவன் தனது மனைவியின் கை விரல்களை வெட்டி எடுத்து, முகம் மற்றும் கழுத்துப் பகுதியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மனைவி மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான கணவன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 1988-89 கிளர்ச்சியில் கொல்லப்பட்ட ஜே.வி.பியினருக்கு நீதி கிடைக்கும்!

## கூறுகிறார் கட்சியின் பொதுச்செயலர்

கொழும்பு, நவ. 27

1988-89 கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜேவிபியினருக்கு நீதி வழங்குவதற்கான முயற்சிகள் எதிர்காலத்தில் இடம்பெறலாம் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

1988-89 கிளர்ச்சியின்போது கொல்லப்பட்ட ஜேவியினருக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் எவையும் தற்போது இடம்பெறாதபோதிலும் எதிர்காலத்தில் இதற்கான முயற்சிகள் இடம்பெறலாம் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

1988-89 ஜேவிபிகிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜேவிபி உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தவர்களிற்காக நீதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெறுமா என்ற கேள்விக்கு, இதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என ஜே.வி.பியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி நிஹால் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து நாங்கள் இதுவரை விசேட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லை. எனினும் அவசியமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் என தெரிவித்துள்ள அவர், ஜே.வி.பி எங்கள் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்,என்ன நடக்கவேண்டும் என்பது குறித்து அவர்கள் அவசியமான பேச்சுவார்த்தைகளை மேற் கொள்வார்கள் என தெரிவித்தார். (அ)

# விஜிதவின் அறிவிப்பினால் அசௌகரியத்தில் புதுடில்லி!

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் டிசம்பர் நடுப்பகுதியில் புதுடில்லிக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்ள இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வெளியிட்ட அறிவிப்பு இந்திய அரசாங்கத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர், கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி இலங்கை வந்திருந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து தமது வாழ்த்துகளை தெரிவித்த எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதியை இந்தியா வருமாறு கோரியிருந்ததுடன், மோடியின் வாழ்த்துச் செய்தியையும் கையளித்திருந்தார்.

இந்த நிலையில் பொதுத் தேர்தலின் வெற்றி பெற்ற பின்னர் கடந்த வாரம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந் தியா செல்ல உள்ளதாக கூறியிருந்தார்.

அமைச்சர் விஜித ஹேரத்தின் இந்தக் கருத்து புதுடில்லிக்கு சற்று அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரலை புதுடில்லி தயார் செய்திருக்காத நிலையிலும், இந்திய அரசாங்கத்தால் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னரும் இந்த தகவலை அமைச்சர் விஜித ஹேரத் வெளியிட்டுள்ளதாக இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஒருவரது விஜயம் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களினதும் முழுமையான ஆலோசனைகளுக்குப் பின்னரே திகதிகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் இறுதிப்படுத்தப்படும். அமைச்சர் விஜிதவின் முன்கூட்டிய அறிவிப்பு இந்திய ஊடகங்களால் விசேட செய்திகளாக வெளியானமையால் புதுடில்லி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைத் துரிதப்படுத்துங்கள்

கல்முனை, நவ. 27

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை துரிதப்படுத்துவதுடன், மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, அனர்த்த நிலைமை தொடர்பில், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளை தொடர்புகொண்டு பேசிய பாராளுமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான உதவிகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தோடு, வெள்ளத்தால் இழுத்து வரப்பட்டு சாய்ந்தமருதில் உள்ள கரைவாகு ஆற்றுப் பாலத்தில் தேங்கி, வெள்ளம் வடிந்தோட தடையாகவுள்ள சல்வீனியா தாவரங்களை அகற்றுமாறு கல்முனை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரை பாராளுமன்ற உறுப்பினர் தொடர்புகொண்டு பேசியதன் விளைவாக சாய்ந்தமருது பிரதேச செயலாளரின் கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான கனரக வாகன உதவியுடன் சல்வீனியா அகற்றும் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# புதையல் தோண்டுவதில் அரசாங்கம் ஈடுபடவில்லை

கொழும்பு, நவ. 27

வெயாங்கொட, வந்துராவ ரஜமஹா விகாரைக்கு அருகில் புதையல் தோண்டுவதற்கான அகழ்வாராய்ச்சியில் அரசாங்கம் ஈடுபடவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், அத்தனகல்லை நீதவானின் உத்தரவுக்கு அமைய இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# எலிக் காய்ச்சல் அபாயம்!

கொழும்பு, நவ. 27

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகத் தொற்று நோயியல் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக எலிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 500 மேற்பட்டோர் எலிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தொற்று நோயியல் விஞ்ஞான பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் அடைமழை 10,000 குடும்பங்கள் பாதிப்பு



கல்முனை, நவ. 27

**அம்பாறையில் பெய்து வரும் கடும் மழை - வெள்ளத்தால் 10 ஆயிரம் குடும்பங்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம். ஏ. சி. எம். றியாஸ் தெரிவித்தார்.

தொடர் மழை காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்கள் மற்றும் கரையோர பிரதேசங்களை அண்டி வாழும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு ,சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், இறக்காமம், உகண உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த பாதிப்பு உணரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் 10, 000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நிலவும் சீரற்ற வானிலை காரணமாக உரிய பரீட்சை நிலையங்களுக்கு செல்ல முடியாத உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை அருகில் உள்ள பரீட்சை நிலையத்துக்கு செல்லுமாறு பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக வீதிகள் தடைப்பட்டால் அருகில் உள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அந்த மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ள நிலையில், ஏதாவது பிரச்னை காணப்பட்டால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் வெள்ள நீர் பரவலால் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி வீதி நீரில் மூழ்கியது .இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அடைமழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதியின் மேலாக வெள்ள நீர் பரவ ஆரம்பித்துள்ளதுடன் இவ்வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும், சம்மாந்துறை பிரதேச செயலகத்தையும் காரைதீவு பிரதேச செயலகத்தையும் இணைக்கின்ற மாவடிப்பள்ளி பாலமும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதனூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சில இடங்களில் பல நாட்களாகப் பெய்து வரும் மழையால் அதிகமான மழை நீர் ஓட்டமில்லாமல் வயல் பகுதிகளில் தேங்கி நிற்பதனால் நெற் பயிர்கள் அழுகும் நிலைக்குள்ளாகியுள்ளதாக பிரதேச விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

# மாவீரர்களின் பெற்றோர் சம்பூரில் கௌரவிப்பு



திருகோணமலை, நவ. 27

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்டம் சம்பூரிலுள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர். இதன் போது மாவீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தென்னம் பிள்ளைகளை பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வழங்கினார்.

இதையடுத்து ஏற்பாட்டுக் குழுவினரால் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் ஒழுங்கு செய்திருந்தனர். (எ)

# பொலிஸ் சமூக பாதுகாப்பு குழு அங்கத்தவர்களுக்கான கூட்டம்

மருதமுனை, நவ. 27

பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பொலிஸ் சமூக பாதுகாப்பு குழு அங்கத்தவர்களுக்கான கூட்டம் மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கனி விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

பெரியநீலாவணை பொலிஸ் சமூக பாதுகாப்பு குழுவின் தலைவர் சாஜித் முனீர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். எல். புத்திக மற்றும் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீரசிங்க, சிவில் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட கிராமங்களின் பொலிஸ் சமூக பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

கிராமங்களில் தற்போது இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள், போதைப்பொருள் பாவனை, விற்பனை மற்றும் சமூகச் சீர்கேடுகள் தொடர்பான விடயங்கள், இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் குறித்து பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களுடன் இணைந்ததாக பொலிஸ் சமூக பாதுகாப்பு குழு செயல்பட்டு வருகிறது. (எ)



# பிரதான வீதிகளில் வெள்ளம் போக்குவரத்து ஸ்தம்பிதம்!

கல்முனை, நவ. 27

அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகள் பலவற்றில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மேலும் வீதிக்கு குறுக்காக பாரிய மரங்கள் சரிந்து விழுந்து போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச் செய்துள்ளன.

குறிப்பாக கல்முனையையும் நாவிதன்வெளி பிராந்தியத்தையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

காரைதீவு அம்பாறை பிரதான வீதியில் உள்ள காரைதீவு மாவடிப்பள்ளி தாம்போதியும் வெள்ளத்தில் மூழ்கியது. அதே போன்று மல்வத்தை வளத்தாப்பட்டி பிரதான வீதியும் வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால் பெரிய வாகனங்களை தவிர ஏனைய வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அலுவலகங்கள் அரைகுறையாக இயங்கின. பெரும்பாலான அரச ஊழியர்கள் பணிக்கு சமுகமளித்திருக்கவில்லை.

சிரமத்தின் மத்தியில் உயர்தர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (எ)

# சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

சாய்ந்தமருது, நவ. 27

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையிலான மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்டனர்.

தற்போது கடும் மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை கண்டறிந்து டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்கான டெங்கு கள தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

மேலும் [illegible] அசுத்தமாகவும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய வகையிலும் வைத்திருந்தவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், சிலருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் கூறுகையில்,

பருவப்பெயர்ச்சி மழை காரணமாக நீர் தேங்கியுள்ள இடங்களில் பெருகும் டெங்கு நுளம்பினால் ஏற்படும் தொற்று நோய்களை தடுப்பதற்காக சாய்ந்தமருது சுகாதார பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டோம். இதன் போது பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார மாதுகள் மற்றும் டெங்கு ஒழிப்பு பிரிவினர் உட்பட 10 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை 480 இற்கும் மேற்பட்ட வீடுகளில் டெங்கு நோய் சம்பந்தமான பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கின்றோம். இருந்தபோதிலும் எவ்விதமான வீடுகளிலும் டெங்கு நோய் ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான நிலைமைகளோ அல்லது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான சூழலோ இல்லை என்பது வரவேற்கத்தக்க விடயமாக காணப்படுகின்றது.

எனவே, தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாக இருப்பதுடன் இனிவரும் காலம் மாரி காலம் என்பதால் மழை நீர் தேங்கக்கூடிய இடங்களை இனம் கண்டு அவற்றை சுத்தப்படுத்தினால் நோய்கள் பரவாமல் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்தார். (எ)

# தனியார் வகுப்புகளை இடைநிறுத்தங்கள்

கல்முனை, நவ. 27

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்படக் கூடிய அனர்த்த அபாய நிலைமையைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் நலன்கருதி இன்று தனியார் கல்வி நிலையங்களின் வகுப்புகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 140 பெண்கள், சிறுமிகள் தினந்தோறும் கொலை!

## வீடுதான் மிக ஆபத்தான இடம் - ஐ. நா. அதிர்ச்சி அறிக்கை

நியூயோர்க், நவ. 27

**ஒரு நாளைக்கு சராசரியாக 140 பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்களது இணையர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்பட்டதாக ஐ. நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேலும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வீடுதான் மிகவும் ஆபத்தான இடமாக மாறியுள்ளது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 25 ஆம் திகதி ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ஐ. நா. கிளை அமைப்புகளான ஐ. நா. பெண்கள் மற்றும் ஐ. நாவின் போதைப்பொருள், குற்றச்செயல்கள் தடுப்பு அமைப்பு சார்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு, அனைத்து இடங்களிலும் உள்ள பெண்களும், சிறுமிகளும் பாலின அடிப்படையிலான வன் முறையால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வீடுதான் மிகவும் ஆபத்தான இடமாக மாறியுள்ளது. கடந்த ஆண்டு ஒரு நாளைக்கு சராசரியாக 140 பெண்கள், சிறுமிகள் தங்களது இணையர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்பட்டனர். உலகளவில், 2023 ஆம் ஆண்டில் 51,100 பெண்கள், சிறுமிகளின் உயிரிழப்புக்கு இணையர் அல்லது உறவினர் காரணமாக இருந்துள்ளனர். 2022 ஆம் ஆண்டில் இவ்வாறு 48, 800 பேர் கொல்லப்பட்டனர்.

பெண்கள் மற்றும் சிறுமிகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவர்கள் அதிகளவில் கொல்லப்படுகின்றனர். அதைத் தடுக்க அரசாங்கங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# நெதன்யாகுவுக்கு மரண தண்டனை!

## ஈரான் உயர் தலைவர் வலியுறுத்தல்

தெஹ்ரான், நவ. 27

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று ஈரான் உயர் தலைவர் ஐயத்துல்லா அலி காமேனி வலியுறுத்தியுள்ளார்.

போர்க்குற்ற வழக்கை விசாரித்த சர்வதேச நீதிமன்று, நெதன்யாகுவுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில் ஈரான் ஆன்மீகத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஓராண்டை கடந்து நீடிக்கும் நிலையில், இஸ்ரேல் மற்றும் காஸா முனையில் மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் நடந்துள்ளதாகவும், அதற்கு காரணமான இஸ்ரேல் நெதன்யாகு, முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் காலண்ட், ஹமாஸ் தலைவர் முகமது தயிப் ஆகியோருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இதற்கு பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இஸ்ரேலுக்கு தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை உள்ளது என்றும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், "காஸாவிலும் லெபனானிலும் இஸ்ரேல் போர்க்குற்றம் செய்துள்ளது. தற்போது அவர்களை கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ளனர். இது போதாது. நெதன்யாகு மற்றும் இந்த ஆட்சியின் குற்றவாளி தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும்" - என்றார்.

ஈரானின் துணை இராணுவப்படையின் தன்னார்வப் பிரிவான பாசிஸ் அமைப்பின் உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ)

# உத்தர பிரதேச கலவரத்தில் உயிரிழப்பு 5 ஆக அதிகரிப்பு

புதுடில்லி, நவ. 27

இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் நடந்த கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது. இது தொடர்பில் சமாஜ்வாதி கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் சம்பல் மாவட்டத்தில் சந்தவுசி நகரில் ஹரிஹர் கோவில் இருந்தது. முகலாயர் காலத்தில் இந்தக் கோவிலின் ஒரு பகுதி இடிக்கப்பட்டு ஷாஹி ஜமா மசூதி கட்டப்பட்டது. இதுகுறித்து ஆய்வு நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியதால் கலவரம் வெடித்தது. இதனால், பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இணைய சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் 2 பெண்கள் உட்பட 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கலவரம் தொடர்பில் நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தப்படும். கலவரத்துடன் தொடர்புடையோர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே விரைவில் போர் நிறுத்த ஒப்பந்தம்

ஜெருசலேம், நவ. 27

ஹிஸ்புல்லா போராளிகளுடன் விரைவில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக இஸ்ரேல் தூதுவர் மைக் ஹெர்சாக் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதலில் ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா அமைப்பு செயல்படுகிறது.


இந்த நிலையில், இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் எட்டப்படலாம் என்று அமெரிக்காவுக்கான இஸ்ரேல் தூதுவர் மைக் ஹெர்சாக் கூறினார்.

"போர் நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு முன் இன்னும் சில பிரச்னைகள் எஞ்சியுள்ளன. எந்தவொரு ஒப்பந்தமாக இருந்தாலும் அரசாங்கத்தின் ஒப்புதல் தேவை. ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இன்னும் சில நாட்களில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்"- என்றார்.

ஹிஸ்புல்லா ஒப்பந்த விதிகளை மீறினால், நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையை வழங்க வேண்டும் என்று இஸ்ரேல் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் பிரச்னைகளில் இதுவும் ஒன்று. ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய படைகளை தெற்கு லெபனானிலிருந்து வெளியேற்ற வேண்டும் என இந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாராளுமன்றத்தை முடக்க எதிர்க்கட்சிகள் சதித்திட்டம்

## பிரதமர் மோடி விமர்சனம்



புதுடில்லி, நவ. 27

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் பாராளுமன்றத்தை முடக்க முயற்சிக்கின்றனர் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சிகளின் அமளியால் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியது. இதன்போது, அதானி விவகாரத்தை எதிர்க்கட்சிகள் எழுப்பின. வழக்கமான நடவடிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு, அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த விவகாரம், மணிப்பூர் வன்முறை, சம்பல் கலவரம் ஆகியவை குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பிக்கள் கோஷமிட்டனர். இதற்கு அவைத் தலைவர் ஓம் பிர்லா அனுமதி வழங்கவில்லை. இதனால் எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளியால், நாள் முழுவதும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

(எ)

# ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி

## உருகுவேயில் ஆட்சி மாற்றம்



மொன்ரிவீடியோ, நவ. 27

உருகுவே ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

தென் அமெரிக்க நாடான உருகுவேயின் ஜனாதிபதி லூயிஸ் லக்கால் போவின் பதவிக்காலம் விரைவில் முடியவுள்ளது. எனவே, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய தேர்தல் நடைபெற்றது.

இதில் ஆளுங்கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக அல்வாரோ டெல்கடோ களமிறங்கினார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் யமண்டு ஓர்சி போட்டியிட்டார். இவர்கள் இருவருக்கும் கடுமையான போட்டி நிலவி வந்தது. இந்த நிலையில் யமண்டு ஓர்சி 49. 8 சதவீதம் வாக்குகளுடன் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட டெல்கடோ 45. 9 சதவீதம் வாக்குகள் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் நீண்டகாலத்துக்கு பின்னர் உருகுவேயில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியை 7 ஓட்டங்களுக்குள் சுருட்டி வரலாற்று சாதனை படைத்த நைஜீரியா

லாகோஸ், நவ. 27

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் எதிரணியை 7 ஓட்டங்களுக்குள் சுருட்டி நைஜீரியா வரலாற்று சாதனை படைத்தது.

2026ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான ஆபிரிக்க மண்டல தகுதி சுற்று நைஜீரியாவில் நடைபெற்று வருகிறது. இதில் லாகோஸ் நகரில் நடந்த "சி" பிரிவு ஆட்டம் ஒன்றில் நைஜீரியா - ஐவரி கோஸ்ட் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நைஜீரியா 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 271 ஓட்டங்கள் குவித்தது.

நைஜீரியா தரப்பில் செலிம் சாலு 112 ஓட்டங்கள் எடுத்தார். இதைத்தொடர்ந்து 272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஐவரி கோஸ்ட் அணி, நைஜீரியா வீரர்களின் மிரட்டலான பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 7. 3 ஓவர்களில் வெறும் 7 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தனர். இதனால் நைஜீரிய அணி 264 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

7 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த ஐவரிகோஸ்ட் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் குறைந்த ஓட்டங்களுக்குள் சுருண்ட அணி என்ற மோசமான சாதனைக்குச் சொந்தமானது.

இதற்கு முன்பு கடந்த செம்ரெம்பரில் நடந்த சிங்கப்பூருக்கு எதிரான ஆட்டத்தில் மங்கோலியா அணியும், 2023ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கு எதிரான ஆட்டத்தில் ஐல் ஆப் மேன் தீவு அணியும் தலா 10 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததே குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக பதிவாகியிருந்தது. (எ)



# 13 வயதில் ஒரு கோடிக்கு ஏலம் போன இந்திய வீரர்

டுபாய், நவ. 27

ஐ. பி. எல். வரலாற்றில் மிகக் குறைந்த வயதில் ஏலப் பட்டியலில் இடம்பெற்றிருந்த வைபவ் சூர்யவன்ஷியை (வயது -13) ரூ. 1. 1 கோடிக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வாங்கியது. (எ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்தியா மீண்டும் முதலிடம்

பெர்த், நவ. 27

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் இந்தியா மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா அபார வெற்றி பெற்றது. இதன் மூலமே முதலிடத்தை பிடித்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்றது. கடந்த 22ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டியில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது. இதில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்ததன் மூலம் முதலிடத்தை இழந்த இந்தியா, இந்த வெற்றியின் மூலம் மீண்டும் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தப் போட்டிக்கு முன்னர் முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலியா 2ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியல் வருமாறு,

1. இந்தியா - 61.11 சதவீதம்,
2. அவுஸ்திரேலியா -57.69 சதவீதம்,
3. இலங்கை - 55.56 சதவீதம்,
4. நியூசிலாந்து - 54.55 சதவீதம்,
5. தென்னாபிரிக்கா - 54.17 சதவீதம்,
6. இங்கிலாந்து - 40.79 சதவீதம்,
7. பாகிஸ்தான் - 33.33 சதவீதம்,
8. பங்களாதேஷ் - 27.50 சதவீதம்,
9. மேற்கு இந்திய தீவுகள் - 18.52 சதவீதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# கஜகஸ்தானை வீழ்த்தியது இந்தியா

சென்னை, நவ. 27

ஆசிய கிண்ண கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில் இந்திய அணி 88 - 69 என்ற புள்ளி கணக்கில் கஜகஸ்தானை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது.

சவுதி அரேபியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கூடைப்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன. இதில் கலந்து கொண்டுள்ள 24 அணிகள் 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவிலுள்ள மற்ற அணிகளுடன் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் நேரடியாக ஆசிய போட்டிக்கு தகுதி பெறும்.

இதில் "இ" பிரிவில் இடம் பிடித்துள்ள இந்திய அணி தனது 4ஆவது தகுதி சுற்று ஆட்டத்தில் கஜகஸ்தானை சந்தித்தது. இந்த ஆட்டம் சென்னை நேரு மைதானத்தில் நடைபெற்றது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 88- 69 என்ற புள்ளி கணக்கில் கஜகஸ்தானை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது. (எ)

# பங்களாதேஷ் தடுமாற்றம்

ஆண்டிகுவா, நவ. 27

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 109 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை பறிகொடுத்துள்ளது. இன்னும் 225 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் 3 விக்கெட்களே அந்த அணி வசம் உள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒரு நாள், 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் ஆண்டிகுவாவில் கடந்த 22ஆம் திகதி தொடங்கியது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மேற்கு இந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 450 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதையடுத்து களமிறங்கிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 269 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து மேற்கு இந்திய தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 152 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இருப்பினும் முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையுடன் பங்களாதேஷ் அணிக்கு 300 ஓட்டங்களுக்கு மேல் வெற்றி இலக்கை நிர்ணயித்தது. இந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 109 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது. (எ)



# இலங்கை - தென்னாபிரிக்கா முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்

கேப்டவுன், நவ. 27

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது.

தனஞ்சய டி சில்வா தலைமையிலான இலங்கை அணி, தென்னாபிரிக்கா சென்றுள்ள நிலையில் இரு அணிகள் இடையே இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் முனைப்புடன் இலங்கை அணியுள்ளதால் இந்தத் தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. (எ)

# ஒருநாள் போட்டியிலும் ஷாண்டோ இல்லை




டாக்கா, நவ. 27

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாண்டோ பங்கேற்க மாட்டார் என்று தெரியவந்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒரு நாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் டெஸ்ட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. டெஸ்ட் போட்டிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதைத்தொடர்ந்து ஒருநாள் போட்டிகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி தொடங்குகின்றன.

இந்த நிலையில், ஒருநாள் போட்டி தொடரில் பங்களாதேஷ் முன்னணி வீரரான முஷ்பிகுர் ரஹீம் இடம் பெறமாட்டார் என தகவல் வெளியாகிள்ளது. அதே போன்று பங்களாதேஷ் அணி தலைவர் ஷாண்டோவும் ஒருநாள் தொடரில் இடம் பெறமாட்டார் என தெரிகிறது. முஷ்பிகுர் மற்றும் ஷாண்டோ இருவரும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் காயடைந்தனர்.

இதனால் அவர்கள் இருவரும் தற்போது நடைபெற்று வரும் மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இடம்பெறவில்லை. அவர்கள் காயம் குணமடைய இன்னும் ஒருசில மாதங்கள் ஆகலாம் என கூறப்படுகிறது. இதனால் அவர்கள் இருவரும் ஒருநாள் தொடரில் இடம்பெறமாட்டார்கள் எனத் தெரியவந்துள்ளது. (எ)

# இங்கிலாந்து - நியூசிலாந்து டெஸ்ட் நாளை ஆரம்பம்

லண்டன், நவ. 27

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் நாளை 28ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடரின் ஆட்டங்கள் முறையே கிறிஸ்ட்சர்ச், வெலிங்டன், ஹாமில்டன் மைதானங்களில் நடைபெறவுள்ளன. இந்த தொடருக்கான இங்கிலாந்து அணி பென் ஸ்டோக்ஸ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜாக் க்ராவ்லி, பென் டக்கட், ஜேக்கப் பெத்தேல், ஜோ ரூட், ஹாரி புரூக், ஆலி போப், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், கஸ் அட்கின்சன், பிரைடன் கார்ஸ், ஷோயப் பஷீர் ஆகியோர் அணியில் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...

வைத்தியசாலைக்கு முன் கொட்டும் மழையிலும் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர் பில் இடம் பெற்ற போராட்டத் தின்போது மக்கள் உண்மைகளை அறியாது குற்றம் சுமத்தியிருந்தாக இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய் மற்றும் சிசுவின் மரண சம்பவத்தின்போது இடம்பெற்ற முரண்பாடான செயற்பாட்டினால்

தாங்கள் தொடர்ச்சியாக மௌனிகளாக்கப்பட்டுள்ளோம் என்பதை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அனைவரும் கறுப்புத் துணியினால் வாய்களை கட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் தமது வைத்தியசாலை தொடர்பாக சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள தொடர்பாகவும் அவர்கள் கவலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாவீரர்...

இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சமநேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கொடிகாமம், உடுப்பிட்டி - எள்ளங்குளம், வடமராட்சி கிழக்கு - உடுத்துறை, வேலணை - சாட்டி மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன், நல்லூர், நெல்லியடி - மாலைசந்தியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயங்களிலும் தியாகி திலீபன் நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடம் மற்றும் மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட இடங்களிலும் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நினைவிடங்களில் நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு - தேராவில், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, அளம் பில், வன்னிவிளான்குளம், முள்ளிவாய்க் கால் துயிலும் இல்லங்களிலும் கொக் குத்தொடுவாய், களிக்காடு, தேவிபுரம், இரட்டைவாய்க்கால், முல்லைத்தீவு நகர கடற்கரை, சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் மாவீரர்களை அஞ்சலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**மன்னாரில்...**

மன்னார் மாவட்டத்தில் ஆட் காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சான், முள்ளிக்குளம் துயிலும் இல்லங்களிலும் மாவீரர்களின் நினைவிடங்களிலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள் ளது. இதேபோன்று வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலும் இல்லத்திலும் நகரப் பகுதியிலும் மாவீரர்கள் அஞ்சலிக்கப்படவுள்ளனர்.

**மட்டக்களப்பில்...**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை, கண்டலடி, மாவடி முன்மாரி, தாண்டியடி, துயிலும் இல்லங்களில் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட இடங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன. அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன், கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை நகரப் பகுதியிலும் விசேட இடங்களிலும் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன. (அ

## யாழ்ப்பாணத்தில்...

குடும்பங்களைச் சேர்ந்த 2335 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1520 பேரும்,சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 266 குடும்பங்களைச் சேர்ந்த 932 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 371 குடும்பங் களைச் சேர்ந்த 1462 பேரும்,சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 416 குடும்பங்களைச் சேர்ந்த 599 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும் பாதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 294 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேரும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எழு பேரும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும் மருதங்கேணி பிரதேச செயலற் பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்-என்றார்.

(அ-05)

## சீனா...

கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் ஜனாதிபதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆயினும் விஜயம் மேற் கொள்ளும் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

சீனத் தூதரகத்தில் இருந்து அவருக்கு சீனாவுக்கு வருமாறு அழைப்பு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## உயிரிழந்தோர்...

நினைவு கூர அரசாங்கம் அனுமதித்துள்ளதா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்-

2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்டிருந்த வர்த்தமானியின் பிரகாரமே நாம் செயல்படுவோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெளிவாக கூறியுள்ளார். பயங்கரவாத அமைப்பையோ அல்லது அதன் உறுப்பினர்களை நினைவு கூரவோ இடமளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறவில்லை.

குறித்த வர்த்தமானியின் பிரகாரம் பயங்கரவாத மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகளையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ நினைவு கூர முடியாது. அதேபோன்று குறித்த அமைப்புகளுக்காக நிதி சேகரித்தல், பிரசாரம் செய்தல், ஒருங்கிணைத்தல், கொடிகளை பயன்படுத்தல், சின்னங்களை பயன்படுத்தல், பாடல்களை பயன்படுத்தல் என அனைத்து விடயங்களும் இதன் ஊடாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணிகளின் பிரகாரம்தான் அரசாங்கம் செயல்படும். இதனையே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மிகவும் தெளிவாக ஊடகங்களுக்கு கூறியுள்ளார். ஆனால், உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர அனைவருக்கும் உரிமை உண்டு. இதற்கு தடையை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு அனுமதியில்லை - என்றார். (அ)

## ஜனவரி...

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச் சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை கூறினார்.

இதேவேளை அதன் இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17ஆம் திகதியும் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, சந்தையில் நிலவும் நாட்டு அரிசியின் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்தவும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தவும் அரிசி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 70,000 மெற்றிக் தொன் ஸ்வர்ண நாடு அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

## புலிகளின்...

நிறைவையிட்டு 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் 70 தென்னம் பிள்ளைகள், 70 மரக்கன்றுகள் மற்றும் இனிப்பு பண்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அவரது இல்ல வளாகத்தில் 70 மரக் கன்றுகளும் மக்களால் நாட்டப்பட்டன.

இதனிடையே அவரது உருவப்படம் தாங்கிய பதாகை வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு பிரசன்னமான வல்வெட்டித்துறை பொலிஸார் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு தடையில்லை எனவும் இருப்பினும் வே. பிரபாகரனது உருவப்படத்தை மாத்திரம் நீக்குமாறும் அறிவுறுத்தியிருந்ததற்கமைய அவரது உருவப்படம் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(அ-05)

## வடக்கு மாகாணத்தில்...

என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 861 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் 56 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 50 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 860 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 295 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 459 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 547 பேர் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேநேரம் வவுனியா மாவட்டத்தில் 87 குடும்பங்களைச் சேர்ந்த 324 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாயத் தொடங்கியுள்ளதுடன், தாழ்நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பரந்தன் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒரு அங்கத்தவரும், புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்துள்ளனர்.

வெண்கல செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் அதிவேக காற்றின் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிப்படைந்ள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளது [illegible] அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## க.பொ.த...

ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நாட்களில் நடைபெறவிருந்த பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

3 நாள்களுக்கு பிறகு நவம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை உயர்தரப்பரீட்சை ஆரம்பமாகும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். (அ)

## வடக்கு...

மாவட்டங்களில் இடர் நிலைமை தொடர்பில் ஆராயும் கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக மாவட்டச் செயலர்களால் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளை மூடுவது தொடர்பான தீர்மானங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு மாவட்ட செயலர்கள் மூலம் எடுக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர், 135 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 129 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர், மக்களை பார்வையிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தண்ணிமுறிப்புக்குளம், முத்தையன் கட்டு குளம் என்பன திறக்கப்படும் நிலைக்குச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மாந்தை கிழக்கில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 536 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த மாவட்டச் செயலர், அவர்களில் 52 குடும்பங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார். கௌதாரிமுனையிலிருந்து பூநகரி மத்திய கல்லூரிக்கு பரீட்சைக்கு தோற்றும் 6 பேருக்கு வாகன ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டதாக மாவட்ட செயலர் தெரிவித்தார்.

ஏ-9 வீதியின் மேற்கு பக்கமாக உள்ள 5 குளங்களில் 2 குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளதாகவும் இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் அதை திறந்து விடுவதற்கான நடவடிக்கைகள் இப்போதே எடுக்கப்படுவதாகவும் மாவட்ட செயலர் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் அவற்றில் ஓமந்தைக்குளம் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் எஞ்சிய 2 குளங்களும் பாதுகாப்புத் தரப்பினரின் உதவியுடன் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாவட்ட செயலர் தெரிவித்தார்.

143 சிறு குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளன என்றும், 200 குளங்கள் வான் பாயும் நிலையை எட்டியுள்ளன எனவும் மேலதிக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2,040 குடும்பங்களைச் சேர்ந்த 7,436 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நிலையங்களில் எந்தவொரு குடும்பங்களுக்கு தங்கவைக்கப்படவில்லை எனத் தெரிவித்த மேலதிக மாவட்ட செயலர், இன்று மாலை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயரலாம் எனக் குறிப்பிட்டார்.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அதானி குழும திட்டங்களை அரசு மீளாய்வு செய்கின்றது

## அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

அதானி குழுமத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என தெரிவித்துள்ள அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கையில் அதானி குழுமத்தின் திட்டங்கள் குறித்து அரசாங்கம் மீளாய்வு செய்கின்றது என குறிப்பிட்டார்.

அமைச்சரவையில் அதானி குழுமத்தின் திட்டங்கள் குறித்து எந்த தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை. தற்போது நிலவரம் குறித்து மீளாய்வு செய்துவருகிறோம் எனவும் அமைச்சரவை பேச்சாளர் மேலும் கூறினார்.

மேலதிக மதிப்பீடுகளுக்காக குறிப்பிட்ட அமைச்சுகளிடமிருந்து அறிக்கைகளை கோரியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# ஆஷாத் மௌலானாவை உடனே நாடு கடத்துக!

## சுவிஸிடம் அநுர அரசு கோரிக்கை

கொழும்பு, நவ. 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட சனல் - 4 காணொளியில் பல சாட்சியங்களை வெளிப்படுத்தியிருந்த ஆஷாத் மௌலானாவை நாடு கடத்துமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கும் முன்னாள் பிரதி அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையான் மற்றும் முன்னாள் அரச புலனாய்வு பணிப்பாளர் சுரேஷ் சாலே ஆகியோருக்கு தொடர்பு உள்ள தாக ஆஷாத் மௌலானா சனல்- 4 காணொளியில் நேரடியாகத் தோன்றி வெளிப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பில், தற்போது சுவிற்ஸர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள ஆஷாத் மௌலானாவிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள அவரை நாடு கடத்துமாறு இலங்கை அரசாங்கம், சுவிற்ஸர்லாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 270க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேலும் பலர் அங்கவீனமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தற்போது வரை எதுவித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதாக உறுதியளித்திருந்தது.

அண்மையில், பிள்ளையான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் சுமார் 10 மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே, தற்போது ஆஷாத் மௌலானாவிடம் விசாரணைகள் மேற்கொள்வதற்காக அவரை நாடு கடத்த அநுர அரசாங்கம் கோரியுள்ளது.

ஆஷாத் மௌலானா வடக்குக் கிழக்கில் போர் நடைபெற்ற காலத்தில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து பணியாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போலி விசா மூலம் ஐரோப்பாவுக்கு செல்ல முயன்ற இருவர் நேற்று கைது!

கொழும்பு, நவ. 27

போலி விசாக்களை பயன்படுத்தி ஐரோப்பாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனும் 24 வயதுடைய யுவதியும் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் இந்தியாவின் புதுடில்லியிலிருந்து நெதர்லாந்து நோக்கிச் செல்வதற்காக நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்களின் விசாக்கள் போலியானவை என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த போலி விசாக்கள் நேர்வே பிரஜைகளினால் தயாரிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# புதுக்குடியிருப்பில் கடும் மழை

முல்லைத்தீவு, நவ. 27

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் கடந்த மூன்று நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் அப்பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

புதுக்குடியிருப்பின் பல இடங்களில் வெள்ள நிலை காணப்படுவதனாலும், வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையினாலும் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# கொழும்பிலிருந்து யாழ். வந்த பஸ் வீதியைவிட்டு விலகியது!

## பெண் ஒருவர் உயிரிழப்பு



கொழும்பு, நவ. 27

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று புனேவ கும்புகொல்லேவ பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கடும் மழை பெய்துவரும் நிலையில் சாலை வழுக்கும் நிலையில் காணப்படுவதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் இதய நோயாளி என்றும், பஸ் கவிழ்ந்ததில் ஏற்பட்ட அதிர்ச்சியில் ஸ்தலத்திலேயே அவர் உயிரிழந்ததாகவும் பஸ் சாரதி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புனேவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பரீட்சைக்கு இடையூறு விளைவித்த இளைஞர்களை எச்சரித்த பொலிஸ்!

யாழ்ப்பாணம், நவ. 27

பருத்தித்துறை பகுதியில் பரீட்சை நிலையத்துக்கு அருகாமையில் பரீட்சாத்திகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக பட்டம் ஏற்றியதாகத் தெரிவித்து 8 இளைஞர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர்.

க.பொ.த.உயர்தர பரீட்சை நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்நிலையில் பருத்தித்துறையில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலையத்துக்கு அருகாமையில் அதிகூடிய சத்தத்துடன் விண் பூட்டி பட்டத்தை பறக்க விடப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனை அடுத்து விரைந்து செய்யப்பட்ட பருத்தித்துறைப் பொலிஸார் பட்டம் பறக்கவிட்ட 18 வயது தொடக்கம் 20 வயது வரையான எட்டு பேரை பட்டம் ஏற்றும் பொருட்களுடன் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று அறிவுறுத்தல் வழங்கி கடும் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-02)

# உயர்தர பரீட்சைக்கு எதிராக மனு

கொழும்பு, நவ. 27

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பிக்கக் கோரி மாணவியொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, டிசெம்பர் 12ஆம் திகதி ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர்னாண்டோ மற்றும் பிரியந்த பெர்னாந்து ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

இந்த முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி ஹன்சனி அழகக்கோன் தாக்கல் செய்த மனுவில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சர் திருமதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் கல்விக்காலம், தொடர்பிலான 39/2023 சுற்றறிக்கையில் உயர்தரப் படிப்புக் காலம் 107 கல்வி நாட்களை நிறைவு செய்ய வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய மனுதாரரான மாணவி, இந்தக் கல்விக் காலத்துக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அர்ச்சுனாவுக்கு பிடியாணை!

கொழும்பு, நவ. 27

புதிதாக தெரிவு செய்யப்பட்ட யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவம் தொடர்பான வழக்கில் நீதிமன்றில் ஆஜராகத் தவறியதை கருத்திற் கொண்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், கொழும்பு, பேஸ்லைன் வீதியில் வீதி விதிமுறை ஏற்படுத்தியதுடன், மற்றுமொரு வாகனச் சாரதியை தாக்கி பலத்த காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்த வழக்கு விசாரணையில் நேற்று நீதிமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஆஜராகத் தவறியமையடுத்து, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுளா ரத்நாயக்க உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.